# இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்

## வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை

## மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை – 21.03.2018

### மாநிலத்தின் கடந்தவாரவானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 28°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 28°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 16°செ முதல் 20°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

### 1. மேற்கு மண்டலம்

மேற்கு மண்டலப் பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான கோயமுத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். 23 மற்றும் 24.3.18 தேதிகளில் லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 35°செ முதல் 37°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 முதல் 75 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 45 முதல் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 6-8 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரை

- ✓ வரும் 23 மற்றும் 24 தேதிகளில் லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் அனைத்துப் பயிர்களுக்கும் பயிர்க்கழிவு மூடாக்கிட்டு கிடைக்கப்பெற்ற ஈரப்பதம் ஆவியாகி வீணாகாமல் தடுக்கவும்
- ✓ எதிர்பார்க்கப்படும் மழையைப் பயன்படுத்தி கோடை உழவு செய்வதின் மூலம் களைகளை கட்டுப்படுத்துவதோடு மட்டும் இல்லாமல் மழை நீர் வழிந்தோடாமல் நிலத்தில் சேமிக்கலாம்.
- ✓ தென்னை மரத்தைச் சுற்றி உள் உற்சாய்வு வட்டவடிவ பாத்திகளை அமைப்பது மழை நீரை தக்க முறையில் பயன் படுத்தவும்.
- ✓ எதிர்பார்க்கப்படும் மழையினால் பூக்கும் தருவாயில் உள்ள கோடை எள் பயிருக்கு தேவையான ஈரப்பதம் கிடைக்காவிடில் நீர்பாசனம் செய்து பூ உதிர்வதை தடுக்கவும்.
- ✓ நிலவும் வானிலையில் முன்பட்ட கரும்பிற்கு ஒரு எக்டருக்கு 166 கிலோ யூரியா மற்றும் 75 கிலோபொட்டாஷ் மேலுரமாக இட்டு மண் அணைக்கவும். போதுமானஅளவு மழை கிடைக்கப் பெறவில்லை எனில் உரமிட்டுநீர் பாசனம் செய்யவும்.
- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால் மத்தியகால கரும்பு சாகுபடி நிலங்களில் முளைவிட்ட கரும்பு கரணைகளை கொண்டு பாடுவாசி மேற்கொண்டு நீர் பாசனம் செய்யவும்.

### 2. காவிரி டெல்டா மண்டலம்

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் மேகமூட்டத்துடன்காணப்படும். பகல் நேர வெப்பநிலையானது 33°செ முதல் 37°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°செமுதல் 27°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 40 முதல் 80 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் 4 முதல் 10 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### வேளாண் அறிவுரை

- ✓ அடுத்த சில நாட்களுக்கு வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் அறுவடை நிலையில் உள்ள தாளடி நெல்லினை அறுவடை செய்து நன்கு காய வைத்து ஈரத்தன்மை 13 சதவீதத்திற்கு கீழ் இருக்குமாறு சேமித்து வைத்து பூச்சிகள் இல்லாமல் பாதுகாக்கவும்.
- ✓ நெல் தரிசு பயிறுவகைப் பயிர்களில் சாம்பல் நோயின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு நனையும் கந்தகத்தூள் 600 கிராம் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

- ✓ நெல் தரிசு பயிறுவகைப் பயிர்களில் பூக்கும் தருணத்தில் இலைவழி உரமாக த.வே.ப.க. பயறு அதிசயம் ஏக்கருக்கு 2 கிலோ தெளிக்கவும்.
- ✓ நெல் தரிசு பயிறுவகைப் பயிர்களில் புள்ளிக்காய்ப்புழுவின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு இன்டாக்சிகார்ப் 15.8% எஸ்.சி. 133 மி.லி. என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- ✓ கால்நடைகளுக்கு தீவனப் பயிர் மற்றும் அடர்தீவனத்தின் அளவு முறையே 70:30 என்ற விகிதத்தில் கலந்து கொடுக்கலாம்.

**3.தெற்கு மண்டலம் -1**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் அதிகமான மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது 30°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 27°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 40 முதல் 80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 2 முதல் 14 கி.மீவேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ தற்பொழுது நிலவும் வானிலையில், மிளகாயில் பழ அழுகல் நோய் மற்றும் நுனி கருகல் நோய் காணப்படுகிறது. இந்நோயைக்கட்டுப்படுத்த காப்பர் ஆக்ஸிகுளோரைடு 0.25 சதம் மற்றும் சினெப் 0.15 சதம் தெளிக்கவும். இதனால் பழத்தின் மகசூல் அதிகரிக்கும்.
- ✓ இவ்வானிலையில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்காவண்ணம் பாதுகாக்க அருகாமையில் உள்ள கால்நடை மருத்துவமனைகளில் தடுப்பூசியை போடவேண்டும்.
- ✓ கோடை மாதங்களில் கிடைக்கும் எதிர்பாராத மழைப்பொழிவு மண்ணில் ஊடுருவதை மேம்படுத்தவும் களை வளர்ச்சியை கட்டுப்படுத்தவும் கோடை உழவு முறை செய்யவும்.
- ✓ வரும் நாட்களில் அதிக காற்று எதிர்பார்க்கப்படுவதால் வாழையில் முட்டு கட்டவும். ஒளி புகும் 4 சதவித காற்றோட்டமான பாலியெத்தின் பை கொண்டு குலையினை முடவும். இதனால் பழுப்படையாத ஒரே மாதிரியான அளவு மற்றும் தரத்துடன் பழங்கள் கிடைக்கும்.
- ✓ தற்பொழுது நிலவும் வானிலையில், நெல்லில் பாக்டீரியா இலைக்கருகல் நோய் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. இதனைக் கட்டுப்படுத்த காப்பர் ஹைட்ராக்ஸைடு 77WP @ 1.25 கிலோ /ஹெக்டேர் நடவுசெய்த 30 மற்றும் 45 நாட்களில் தெளிக்கவும்.
- ✓ தற்பொழுது நிலவும் வானிலையில், நெல் இலைசுருட்டு புழு தாக்குதல் தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த பாசலோன் 35 ஈசி 1500 மி.லி/ எக்டர் அல்லது பாஸ்போமிடான் 40 சதம் எஸ்எல் 1250 மி.லி/எக்டர் தெளிக்கவும்
- ✓ தற்பொழுது நிலவும் வானிலையில், நெல்லில் கதிர் நாவாய் பூச்சி தாக்குதல் தென்படுகிறது. இதனை கட்டுப்படுத்த மாலத்தையான் 50 EC @ 500 மி.லி / ஹெக்டெர் இரண்டு முறை பயன்படுத்தவும் .

**தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது தேனி மாவட்டத்தில் மட்டும் 32°செ முதல் 33°செஆகவும், மற்ற மாவட்டங்களில் 34°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலையானது தேனி மாவட்டத்தில் மட்டும் 24°செ முதல் 26°செஆகவும், மற்ற மாவட்டங்களில் 24°செ முதல் 27°செஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 40 முதல் 80 சதவிகிமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 4 முதல் 10 கி.மீ வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ தற்போது நிலவும் பருவச்சூழ்நிலையின் காரணமாக மாவில் மலர் கட்டிகளின் தாக்குதல் தென்படுகின்றது. இதனைக்கட்டுப்படுத்த தாக்கப்பட்ட மலர்களையும், பூங்கொத்துக்களையும் அகற்ற வேண்டும். மேலும் 1 லிட்டர் தண்ணீருக்கு 6 கிராம் டைமீத்தோயேட் 30 EC அல்லது 5 கிராம் மெத்தில் டெமெட்டான் 25 EC இவற்றில் ஏதேனும் ஒன்றினை தெளித்து மலர் கட்டிகளின் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம்.

- ✓ தற்போது நிலவும் பருவநிலையின் காரணமாக தென்னையில் மாவுப்பூச்சி என்ற கள்ளிப்பூச்சிகளின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இதனைக்கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி மாலத்தியான் 50 EC அல்லது 1 மில்லி டைமெத்தோயேட் 30 EC அல்லது 1 மில்லி மெத்தில் டெமெட்டான் 25 EC இவைகளில் ஏதேனும் ஒன்றை கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.
- ✓ தற்போது நிலவும் வெப்பநிலையில் வெண்டையில் மஞ்சள் நரம்புத் தேமல் நோய் காணப்படுகின்றது. இப்பூச்சியை கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2.5 மில்லி குளோரிபைரிபாஸ் மற்றும் 2 மில்லி வேம்பு எண்ணையை கலந்து தெளிக்க வேண்டும்.
- ✓ தற்போது நிலவும் பருவச்சூழ்நிலை மிளகாய் நுனிக்கருகல் மற்றும் பழ அழுகல் நோய் தென்படுகின்றது. இவற்றைக் கட்டுப்படுத்த 1 லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் மேங்கோசெப் அல்லது 2.5 கிராம் தாமிர ஆக்ஸிகுளோரைடு 1.25 கிலோ இவற்றுள் ஏதேனும் ஒன்றுடன் கலந்து 15 நாட்கள் இடைவெளியில் மூன்று முறை தெளிக்க வேண்டும்.
- ✓ தற்போது நிலவும் கோடை காலத்தில் கத்தரிபயிரில் வெள்ளை ஈக்களின் தாக்குதல் அதிகமாக இருக்கும். இதனைக் கட்டுப்படுத்த மஞ்சள் நிற ஒட்டும் பசை அட்டைப்பொறி எக்டருக்கு 12 வீதம் வைக்கவேண்டும். மேலும் 1 லிட்டர் தண்ணீருடன் 3 மில்லி வேப்பெண்ணெய் கலந்து, அதனுடன் 1 மில்லி டீப்பால் என்ற ஒட்டும் திரவம் சேர்த்து தெளிக்க வேண்டும்.
- ✓ தற்போது நிலவும் பருவநிலையின் காரணமாக தக்காளி பயிரிடும் பகுதிகளில் முன்பருவ இலைக்கருகல் நோய் பரவலாக காணப்படுகிறது. இந்நோயைக் கட்டுப்படுத்த பயிர் குப்பைகளை அகற்றி எரிக்க வேண்டும். மேலும் 1 லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் மேன்கோசெப் அல்லது 2 கிராம் குளோரோதளானில் என்ற மருந்துகளில் ஏதேனும் ஒன்றை 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும்.
- ✓ தற்போது நிலவி வரும் வானிலையின் காரணமாக கால்நடைகளில் அயர்ச்சி ஏற்படும் வாய்ப்புகள் உள்ளதால் கால்நடை வளர்ப்போர்கள் தங்களின் கன்றுகளுக்கு நாள் ஒன்றுக்கு 30 கிராம் தாதுஉப்புக்கலவை கொடுக்க வேண்டும். மேலும் கன்றுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்தல் வேண்டும்.

**4. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 19°செ முதல் 20°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 12°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 60 முதல் 85 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 4-6 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மாவட்டத்தில் அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ வானம் மேகமூட்டமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் பூஞ்சான நோய் பரவுவதை தடுக்க சரியான முற்போக்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- ✓ நிலவிவரும் அதிக ஈரப்பதம் மற்றும் எதிர்பார்க்ககூடிய மழை காரணமாக, பீட்ருட் பயிரில் இலைப்புள்ளி நோய் வேகமாக பரவக்கூடும். கட்டுப்படுத்த, மேங்கோசெப் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் என்ற அளவில் தெளிக்கவும்.
- ✓ சமீபத்தில் பெறப்பட்ட மழையின் ஈரம் மற்றும் வரக்கூடிய லேசான மழையை பயன்படுத்தி லூபின், பாப்பரை போன்ற பசுந்தாள் உரப்பயிர்களை பயிரிடலாம்.

**5. வடமேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் தென்படும். பகல்நேர வெப்பநிலை 35°செ முதல் 36°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 25°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 40 முதல 80 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 3 - 4 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ அடுத்த மூன்று நாட்களுக்கான நாமக்கல் மாவட்ட வானிலையில் வானம் லேசான மேகமூட்டத்துடனும், பொதுவாக மழையற்றும் இருக்கும். பகல் மற்றும் இரவு வெப்ப அளவுகள் மீண்டும் உயர்ந்து காணப்படுமாதலால், கோடை காலத்திற்கான கோழித்தீவன பண்ணை மற்றும் நீர் மேலாண்மை ஆகியவற்றை சீரிய முறையில் பின்பற்ற வேண்டியது அவசியம். குறிப்பாக மாலை வேலைகளில் முட்டைக் கோழிகளுக்கு தேவையான அளவு குளிர்ந்த நீர் கிடைக்குமாறு செய்யவேண்டும். இதனால் வெப்ப அதிர்ச்சி காரணமாக கோழிகளில் இறப்பு ஏற்படாமலும் முட்டை உற்பத்தியில் குறைவு ஏற்படாமலும் தடுக்கலாம்.
- ✓ மரவள்ளியில் துத்தநாகம் மற்றும் இரும்பு சத்து பற்றாக்குறைகளைச் சரிசெய்ய 1 சதவீத இரும்பு சல்பேட் (10கிராம்-லிட்டர்) மற்றும் 0.5 சதவீத துத்தநாக சல்பேட் (5கிராம்-லிட்டர்) கரைசல்களைத் இலைவழியாக மூன்று முறை தெளிக்க வேண்டும்.

**6. வடகிழக்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 26°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 55 முதல் 85 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 4 முதல் 8 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ பகல் நேரங்களில் வெப்பம் அதிகமாக இருப்பதால் கோழிப்பண்ணைகளில் தீவன தொட்டியை காலை 10 மணி முதல் மாலை 5 மணிவரை உயர்த்தி வைப்பதால் வெப்பதாக்கத்தை குறைக்கலாம். மேலும் குடிநீரில் தாது உப்புகள் மற்றும் B – காம்ளக்ஸ் வைட்டமின் கலப்பதால் வெப்ப அகழ்ச்சியிலிருந்து. பாதுகாக்கலாம்.
- ✓ உழவர்கள் கறவை மாடுகளின் வெப்பத்தின் தாக்த்தை குறைக்க வெயில் அதிகமாக இருக்கும் நேரத்தில் இரண்டு அல்லு மூன்று முறை தண்ணீர் தெளித்து உடல் வெப்பத்தினை தணிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.
- ✓ உழவர்கள் தங்களுடைய கால்நடைகளுக்கு அருகில் உள்ள கால்நடை மருத்துவர்களை அணுகி கோமாரி நோய்க்கான தடுப்பூசி போட்டுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- ✓ உழவர்கள் தங்களுடைய கிடேரிகளுக்கு தினமும் 25 முதல் 50 கிராம் அளவு தாது உப்பு கலவை அளிப்பதன் மூலம் அதன் இனப்பெருக்கதிறனை அதிகரிக்கலாம்.
- ✓ கால்நடை வளர்ப்போர் தங்களுடைய மாடுகளில் உண்ணிகளினால் பரவும் இரத்த ஒட்டுண்ணி நோயினை கட்டுப்படுத்த பியுடாக்ஸ் மருந்து கலவையினை (2 மி.லி பியுடாக்ஸ் / ஒரு லிட்டர் தண்ணீர்) மாடுகளின் மேல் தெளிக்கவும்.
- ✓ செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடுகளுக்கு கால்நடை மருத்துவரின் பரிந்துரைப்படி குடற்புழு நீக்க மருந்தினை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- ✓ நெல் பயிரில், ஆனைக்கொம்பன் ஈயைக் கட்டுப்படுத்த ஹெக்டருக்கு குளோரடைபிரிபாஸ் 20 % EC 1250 மி.லி அல்லது பைப்ரோனில் 5% EC 1000-1500 மி.லி அல்லது தையமீத்தாக்சம் 25% WG 100 கிராம் என்ற அளவில் பயன்படுத்தவும்.

**7.அதிக மழை பெறும் மண்டலம்**

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 34°செ ஆகவும் இரவுநேர வெப்பநிலை 25°செ முதல் 26°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 60 முதல் 80 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது காற்றின் வேகம் மணிக்கு 6 – 8 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் நாட்களில் 30 மி.மீ மழை பெய்ய வாய்ப்புள்ளது.
- ✓ மரவள்ளி : மரவள்ளியில் மாவுபூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த மீன் அமில சோப்பை 1 லிட்டர் தண்ணீரில் 25 கிராம் வீதம் கலந்து தெளிக்கவும்.
- ✓ கனகாம்பரம் : கனகாம்பரத்தில் இலைப்புழுவை கட்டுப்படுத்த ஸ்பினோசாட் கரைசலை 1 லிட்டர் தண்ணீரில் 75 மிலி. கலந்து தெளிக்க வேண்டும்.
- ✓ வாழை : வாழையில் இலைப்புள்ளி நோயைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீரில் புராபிகோனோசல் 1 மி.லி. + ஒட்டும் திரவம் 0.5 மி.லி. என்ற அளவில் கலந்து தெளிக்கவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம்,கோவை**